# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம்<br>*frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ<br>*fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ்<br>*nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com*<br>*ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **16 ஜூன் 2019** | **மூவொரு இறைவன் பெருவிழா** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

இயேசுவில் அன்பு சகோதர சகோதரிகளே! மூவொரு இறைவன் பெருவிழாவைக் கொண்டாட ஆலயத்தில் ஒன்றாக் குழுமியிருக்கும் உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்தவின் அருளிலும், கடவுளின் அன்பிலும் தூயஆவியின் நட்புறவிலும் இனிய அன்பு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

கடவுள் ஒருவர் இருப்பதைப் பகுத்தறிவால் அறிய முடியும். ஆனால், ஒரே இறைவன் எப்படி மூன்று ஆட்களாக வாழ்கிறார்? இறைவன் எப்படி ஆள் தன்மையோடு இருக்க முடியும்? என்ற கேள்விகளைத் தீர்க்க நமது பகுத்தறிவு மட்டும் போதாது, அதற்கு இறைவெளிப்பாடு தேவை. மூவொரு கடவுளைப் பற்றிக் கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார்.

பிதா, சுதன், தூய ஆவி ஆகிய மூன்று ஆட்களுக்கும் அன்புதான் அடிப்படை. தந்தை மகனை அன்புச் செய்கிறார். மகன் தந்தையை அன்புச் செய்கிறார். இருவரிடமிருந்தும் அன்பாகவும் ஆற்றலாகவும், தூய ஆவிப் புறப்பட்டு வருகிறார். மூன்று ஆட்களுக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே இறையியல்பு இருப்பதால் ஒன்றிப்பு நிலவுகிறது. தந்தை படைப்பவராகவும், சுதன் மீட்பவராகவும், தூய ஆவி அர்ச்சிப்பவராகவும், சாதாரண முறையில் நாம் புரிந்துக் கொண்டாலும் எந்த ஒரு பணியையும் எந்த ஓர் ஆளும் தனித்துச் செய்வதில்லை. மூன்று ஆட்களும் எல்லாவற்றிலும் இணைந்துச் செயல்படுகின்றனர்.

தந்தை மகன் தூயஆவி என்னும் கூட்டுத் தத்துவம் நம்மில் இருக்கும் பகைமை எண்ணங்களை நீக்கிச் சுயநலத்தைப் போக்கவும், நட்புறவில் வாழத் தேவையாக வரங்களைத் தரவும் இன்றைய தமதிருத்துவப் பெருவிழாத் திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

## தந்தையர் தினம் 2019




நமது பங்குத் தந்தை, உதவிப் பங்குத்
தந்தையர்கள் மற்றும்
அனைத்து தந்தையர்களுக்கும்,
தூய லூர்து அன்னை ஆலயத்தின் சார்பாக
**தந்தையர் தின நல்வாழ்த்துக்கள்.**




இறைத் தந்தையின் ஆசீரும் செபங்களும் உங்களுக்கு உரித்தாகுக!

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




பள்ளி விடுமுறை காரணமாக இவ்வாரம் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது. மீண்டும் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், 07-07-2019 முதல் ஆரம்பமாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை, நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். இக்காணிக்கையானது, நம் உயர்மறைமாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களுக்காகவும், கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி




**இன்று மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.




தந்தையரை மதிப்போர் பாவங்களுக்குக் கழுவாய் தேடிக்கொள்கின்றனர். (சீராக் 3:3)

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | நீதிமொழிகள் 8:22-31 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 8: 3-4. 5-6. 7-8 |
| **பதிலுரை:** | ஆண்டவரே! உமது பெயர் உலகெங்கும் மேன்மையாய் உள்ளது! |
| **இரண்டாம் வாசகம்:** | உரோமையர் 5: 1-5 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள், தந்தை, மகன், தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 16:12-15 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

